# திருப்பாலைவனம் கல்வெட்டுக்கள்

மா. ரா. அரசு

ஆசிரியர் :

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

M.A., L.T., M.O.L., Ph.d.

துணைத்தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

திருப்பாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு

1960

முதற் பதிப்பு: செப்டெம்பர் 1960

சாந்தி பிரஸ், சென்னை-1

*என்றும் பிரியாத நாய்ச்சியார் எனும்*

# லோகாம்பிகை பதிகம்

அன்னையே யின்னேர மடிமைமுறை யிடுவதுன்
னரியதிரு வுளமறியுமே
யானுலு முறையிடுவ தென்னவெனி லகிலத்தி
லளவிலாப் பிறவிபெற்றும்
பின்னையப் பிறவிதொறும் மனைவாழ்க்கை முதலையின்
பேழ்வாயிற் சிக்கியந்தோ
பேசுதற் கரிதாய பிணிமூப்பு சாக்காடு
பெற்றளவிற் றுன்பிலாழ்ந்தும்
வுன்னியதை நீங்கிடா துயர்சுகம தாயெண்ணி
யொழியாத காலன்வசமா
யுழன்றதினி போதுநின் னுபயவடி நீழலி
லோய்வுற் றிருக்கவருளாய்
தென்னையொடு கமுகுநற் சென்னலொடு கன்னலார்
திருப்பாலை வனமேவியே
சீலவடியார்க் கருள்செய் பாலீசர் பாலமருந்
திரிலோகாம் பாளன்னையே !

— *சிவராஜ சுவாமிகள்*

# முகவுரை

திருப்பாலைவனம் திருப்பாலீசுவரர் – திருக்கோயில் கல்வெட்டுக்களைப் பார்வையிட்டு, இக் கோயிலுக்கு வந்து, சென்னை நக்கீரர் கழகச் சார்பில், சென்னைப் பல்கலைக்கழகத் துணைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. டாக்டர் மா இராசமாணிக்கனார் அவர்கள் 31-1-60-இல் சொற்பொழிவாற்றியதைக் கேட்டு மகிழ்ந்தோம். எங்கள் கோயில் கல்வெட்டுச் செய்திகள் அனைத்தையும் எங்கள் வேண்டுகோளின்படி அவர்கள் எழுதி உதவினார்கள். நாங்கள் அச் செய்திகளை இந் நூல் வடிவில் மிக்க மகிழ்ச்சியோடு வெளியிடுகின்றோம். தமிழ் மக்கள் இதனைப் படித்து, இக்கோவிலின் பழைமையையும் பெருமையையும் அறிந்து, நம் பண்டையோர் பேணி வளர்த்த நமது உயிரனைய சைவ சமயத்தை வளர்க்கும்படி வேண்டுகின்றோம். திரு. டாக்டர் அவர்களுக்கும் அவர்களை அழைத்து வந்த நக்கீரர் கழகத்ததினருக்கும், கழகத்தின் பொதுச் செயலாளர், திரு. சிறுவை மோகனசுந்தரம் அவர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரியது.

ஆசானபூதூர் சிவசங்கர முதலியார்
தத்தமஞ்சி வைத்தியலிங்க முதலியார்
ஏலியம்பேடு ஜெயராம முதலியார்

தருமகர்த்தர்கள்

# திருப்பாலைவனம்*

திருப்பாலைவனம் செங்கற்பட்டு மாவட்டத்தின் வட பகுதியில் கடற்கரைக்கு ஏறத்தாழ ஐந்துகல் தொலைவில், உள்தள்ளி இருக்கும் சிற்றூராகும். ஆலங்காடு, ஆர்க்காடு, வேற்காடு என்று இன்று அழைக்கப்பெறும் ஊர்கள் அமைப்புண்ட இடங்கள் பண்டைக்காலத்தில் முறையே ஆலங்காடு, ஆர்க்காடு, வேற்காடுகளாக இருந்தவையாகும். இவ்வாறே (திருப்)பாலைவனம் என்னும் இவ்வூர் அமைந்த இடம், பண்டைக்காலத்தில் பாலைமரக்காடாக இருந்தது. இன்றும் கோவிலில் பாலைமரம் உள்ளது இதனை வலியுறுத்துவதாகும். கோவிலின் சிறப்புக்கருதித் 'திரு' என்னும் அடைமொழி ஊர்ப்பெயருடன் சேர்ந்து வழங்கப் பெறலாயிற்று,

## கல்வெட்டுக்கள்

இவ்வூர்ச் சிவன் கோவிலில் 71 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இந்த 71 கல்வெட்டுக்களுள் தமிழ்க் கல்வெட்டுக்கள் 65; தெலுங்குக் கல்வெட்டுக்கள் 3; வடமொழிக் கல்வெட்டுக்கள் 2; கன்னடக் கல்வெட்டு 1. இவற்றுள் சில கல்வெட்டுக்கள் சிதைந்து உள்ளன. அதனால் அவை இன்ன காலத்தில் தோன்றின என்பதும் இன்ன செயலுக்காகத் தோன்றின என்பதும் புலப்படவில்லை.

---

* 1929ஆம் ஆண்டுக் கல்வெட்டு *அறிக்கையில்* (எண் 307-377) 71 *கல்வெட்டுக்கள் திருப்பாலைவனத்தைச் சேர்ந்தவை. இக்கல்வெட்டுச் செய்திகளையும் இவற்றைப்பற்றிக் கல்வெட்டறிஞர் தம் அறிக்கையில் எழுதியுள்ள செய்திகளையும் பிறவற்றையும் துணையாகக் கொண்டே இக்கட்டுரை எழுதப்பெற்றது.*

எஞ்சியுள்ள கல்வெட்டுக்களில் 41 கல்வெட்டுக்கள் சோழர் காலத்தவை; 3 பாண்டியர் காலத்தவை; நெல்லூர்ப் பகுதியை ஆண்ட (சோழர்க்கடங்கிய) சிற்றரசரான தெலுங்குச் சோழர் கல்வெட்டுக்கள் 12 ஆகும்; விசயநகர வேந்தர் காலக் கல்வெட்டுக்கள் 3; காகதீய அரசனான பிரதாபருத்திர தேவன் கல்வெட்டு 1. எனவே, 71 கல்வெட்டுக்களுள் 61 கல்வெட்டுக்கள் இன்ன இன்ன காலத்தவை என்பதை நாம் எளிதில் அறியலாம். இனி இவற்றைக் கால முறைப்படி காண்போம்:

## பேரரசர்

1. திரிபுவன சக்கரவர்த்தி வீர ராசேந்திர தேவர் (கி. பி. 1064-1069)
2. ,, ,, குலோத்துங்க சோழ தேவர் I (கி. பி. 1070-1122)
3. ,, ,, விக்கிரம சோழ தேவர் (கி பி. 1122-1135)
4. ,, ,, குலோத்துங்க சோழ தேவர் II (கி. பி. 1135-1150)
5. ,, ,, இராசராச தேவர் II (கி. பி. 1146-1173)
6. ,, ,, இராசாதிராச தேவர் II (கி. பி. 1163-1179)
7. ,, ,, குலோத்துங்க சோழ தேவர் III (கி. பி. 1178-1218)
8. ,, ,, இராசராச சோழ தேவர் III (கி. பி. 1216-1246)
9. ,, ,, சடையவர்மன் சுந்தர பாண்டிய தேவர் (கி. பி. 1251-1271)

## சோழர்க்கடங்கி நெல்லூரை ஆண்ட சிற்றரசர்கள்

1. தம்மு சித்தி (மூன்றும் குலோத்துங்கன் காலம்)
2. திருக்காளத்தி தேவன் கண்ட கோபாலன் (ஷை காலம்.)
3. இராசராச கண்ட கோபாலன் (இராசராசன் III காலம்)
4. விஜய கண்ட கோபால தேவர் (இராசேந்திரன் III காலம்)

## சம்புவராயர்

இராசநாராயண சம்புவராயர் (சோழர்க்குப் பிற்பட்ட காலம்)

## விஜயநகர வேந்தர்கள்

1. சாயன உடையார் (வீரசாயன உடையார்)—முதல் கம்பணதேவர் மகன்; கி. பி. 1347-இல் பட்டம் பெற்றவர்.
2. குமார புக்கராயர் (இரண்டாம் ஹரிஹரர் மகன்; கி. பி. 1377-1404)

## காகதீய அரசன்

மகாமண்டலேசுவர பிரதாபருத்திரதேவர் (குலோத்துங்கன் III காலம்)

சில கல்வெட்டுக்களில் சக ஆண்டு 1356, 1362, 1681 என்பவை காணப்படுகின்றன.

## கல்வெட்டுக்களின் காலம்

இக்கல்வெட்டுகளின் காலத்தை நோக்கும்போது, திருப்பாலைவனத்துச் சிவன் கோவில் கி. பி. 11-ஆம் நூற்றுண்டு முதல் 18-ஆம் நூற்றுண்டு முடிய—ஏறத்தாழ 800 ஆண்டு

கள் சிறப்புற்ற நிலையில் இருந்தது தெரிகிறது. கி.பி. 7முதல் 9-ஆம் நூற்றுண்டு வரை வாழ்ந்த நாயன்மாரால் இத்தலம் பாடப்பெறவில்லை. எனவே, இது சோழர் காலத்தில் தோன்றிய திருக்கோயில் என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

## கோவில் திருப்பணிகள்

சோழர் காலத்துத் தமிழகத்தில் கோவில் திருப்பணிகள் மிகுந்து விளங்கின. பேரரசர், சிற்றரசர், அரசாங்க அலுவலர், உழவர், வணிகர், தேவரடியார் முதலிய பலரும் சைவ சமயத் திருப்பணியில் ஈடுபட்டு இருந்தனர். இந்த நிலைமை திருப்பாலைவனத்திலும் இருந்தது என்பதைப் பல கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

சோழர்கால மக்களும் பிற்கால மக்களும் (மன்னர் உட்பட அனைவரும்) திருப்பாலைவனக் கோவிலுக்குச்செய்த திருப்பணிகள் யாவை?

## 1. விளக்கு எரித்தல்

கோவிலில் விளக்கு எரிக்க மக்கள் பணம், ஆடுகள், பசுக்கள், எருமைகள், நிலம் முதலியவற்றை வழங்கினர். கோவிலில் விளக்கு எரித்தல் பற்றிய கல்வெட்டுக்களே ஒவ்வொரு கோவிலிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. எனவே, கோவிலில் விளக்கெரித்தல் சிறந்த அறப்பணியாகக் கருதப்பட்டது என்பது தெரிகிறது அன்றே?

கோவிலில் பலவகை விளக்குகள் எரிக்கப்பட்டன. அவை 1. சாதாரண விளக்கு, 2. நந்தா விளக்கு, 3. சந்தி விளக்கு, 4. பாதி விளக்கு எனப் பலவகைப்பட்டன. 1. **சாதாரண விளக்கு** என்பது பூசை நேரங்களில் மட்டும் ஏற்றப்படும் விளக்கு எனக் கொள்ளலாம். 2. **நந்தா விளக்கு** என்பது எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும் விளக்காகும். 3. **சந்தி விளக்கு** என்பது காலை மாலைச் சந்திகளில்

மட்டும் எரிக்கப்படுவது போலும்! 4. **பாதிவிளக்கு** என்பது பற்றிய விவரம் புலப்படவில்லை. ஒரு விளக்குக்கு உரியதானம் செய்ய இயலாத இருவர் சேர்ந்து பாதி-பாதி விளக்குக் குரிய தானம் செய்யும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது போலும் !

திருப்பாலைவனம் கோவிலில் சாதாரண விளக்குகள் 32 எரிக்கப்பட்டன; நந்தா விளக்குகள் 3 எரிக்கப்பட்டன; சந்தி விளக்குகள் 20 எரிக்கப்பட்டன; பாதி விளக்கு 1 எரிக் கப்பட்டது.

## 2. திருநந்தவனம்

திருப்பாலைவனம் கோவிலுக்கு 7 **நந்தவனங்கள்** ஏற்பட் டிருந்தன. அவற்றுள் மூன்றின் பெயர்கள் கல்வெட்டுக் களில் குறிக்கப்பட்டுள்ளன. அவை 1. **பத்தர் சித்தத்து உறை வான்** திருநந்தவனம், 2. **ஐம்பத்தெழுவர்** திருநந்தவனம், 3. ஆலால சுந்தரன் திருநந்தவனம் என்பன. நந்தவனம் அமைக்க நிலம் தானமாக விடப்பட்டது. நந்தவனம் வைக்க விரும்புவோர் கோவில் நிலத்தையோ வேறு நிலத்தையோ அளந்து விலைக்கு வாங்கிக் கோவிலுக்கு விடுவர். திருப்பாலை வனத்தில் நிலத்தை யளக்க, 1. **கண்டர் கண்டன் கோல்,** 2. **வாழ வந்தான் கோல்**என்பவை வழக்கில் இருந்தன.

## 3. நீராட்டல், பூசை முதலியன

1. குறித்த நாளில் அம்மையப்பர் சிலைகளைச் சிறப்பு முறையில் நீராட்டப் பணம் தானம் செய்யப்பட்டது; 2.பூசைக் கும் படையலுக்குமாக நிலதானம் செய்யப்பட்டது ; 3. பூசைக்கும் நடுப்பகல் படையலுக்கும் காசு தானம் செய் யப்பட்டது; 4. உத்தராயண சங்கராந்தியில் பூசைக்கும் படையலுக்கும் ஐந்தே முக்கால் **கண்ட கோபாலன் மாடை** தானம் செய்யப்பட்டது. (கண்ட கோபாலன் ஆட்சியில்

அவன் பெயரால் வழங்கிய **நாணயம்** 'கண்ட கோபாலன் மாடை' எனப்பட்டது.

## 4. சிலைகள் எடுப்பித்தல்

கோவிலில் காரைக்கால் அம்மையார் சிலை, சந்திர சேகரர்—உமாதேவியார் சிலை, ஆஞ்சநேயர் சிலை என்ப வற்றை மக்கள் எடுப்பித்தனர். ஒருவன் முன்பே இருந்த நடராசர் சிலைக்குப் பீடம் வழங்கினன்:

## 5. விழாக்கள்

திருப்பாலைவனம் சிவன் கோவிலில் **சித்திரை விழாவும் மார்கழித் திருவாதிரை விழாவும்** நடைபெற்றன என்பது கல் வெட்டுக்களால் தெரிகின்றது. (1) இறைவன்—இறைவிசிலை களை மார்கழித் திருவாதிரையில் நீராட்டவும், அவற்றுக்கு அமுது படைக்கவும், அன்று விழா நிகழ்த்தவும் திருப்பாலை வனத்தைச் சேர்ந்த வணிகன் 'கண்ட கோபாலன் மாடை' என்னும் பெயர் கொண்ட ஆறு நாணயங்களை அளித்தான். (2) பெரும்பேட்டுநிலைத் தத்த மஞ்சி சபையாரிடம் பொற் கொல்லன் ஒருவன் சித்திரை விழாக் கொண்டாடப் பணம் கொடுத்தான். அச்சபையார் அப்பணத்திற்கு நிலத்தை வாங்கினர்; அதன் வருவாயைக் கொண்டு ஆண்டுதோறும் சித்திரை விழாக் கொண்டாடினர்.

## 6. மடங்கள்

திருப்பாலைவனத்தில் மூன்று மடங்கள் இருந்தன என் பதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அவை (1) **தன்ம**

ஆர். கே. நாவலர்
மா. ரா. அரசு
சென்னை 600001

**தாவளன்'*** திருமடம், (2) **கண்ட கோபால மாணிக்க மடம்**, (3) **அன்பர்க்கு அடியார் மடம்** என்பன. கண்ட கோபால மாணிக்க மடம் அடியார்களை உண்பித்தலும், நந்தவனத்தைப் பாது காத்தலும் ஆகிய செயல்களை மேற்கொண்டது. அன்பர்க் கடியார் மடத்தில் **ஆண்டார்கள்** இருந்தனர். அவர்கள் கோவிலில் இருந்த திருக்கோட்டி மண்டபத்தை மேற்பார்த்த னர்; திருமுறை ஓதினர்; பத்தர் சித்தத்து உறைவான் திரு நந்தவனத்தை வளர்த்தனர்.

## 7. மண்டபம் முதலியன

(1) திருப்பாலைவனம் கோவில் கற்றளியாக்கப்பட்டது; (2) மகாமண்டபம் கட்டப்பட்டது; (3) கோவிற் படிகள் கட்டப் பட்டன; (4) அம்மன் கோவில் பழுதுபார்க்கப்பட்டது; (5) கோவில் திருமதில் (சுந்தரபாண்டியன் திருமதில்) கட்டப் பட்டது.

## பிற செய்திகள்

(1) சுவாமியின் பெயர் திருப்பாலீசுவரர்; **திருப்பாலை வனம் உடையார்**. அம்மன் பெயர்—**என்றும் பிரியாத நாய்ச்சியார்.**

---

*கங்கைக்கும் நருமதைக்கும் இடைப்பட்ட 9 லட்சம் கிராமங்களைக் கொண்ட நாடு **தாஹள** நாடு எனப்பட்டது. அந்நாட்டில் **கோளகிரி** என்பது ஒருமலை. அம்மலைப்பகுதியில்—சோணையாற்றங்கரையில் **சத் பாவ சம்பு** என்பவரால் கி. பி. 940-இல் **கோளகிமடம்** அமைக்கப் பட்டது. அதற்கு 3 லட்சம் கிராமங்கள் சொந்தமாயிருந்தன. (*வட நாட்டரசர் மரபின் வரலாறு*, II, பக். 762–800). கோளகி மடத்துச் சிவாசாரியார் காலப்போக்கில் தென்னாட்டிலும் மடங்களை அமைத்துக் கொண்டு பரவினர். (*சைவ சமய வளர்ச்சி*, பக். 221-224). **தாஹள** என்னும் பெயரே இங்குத் '**தாவள**' என மாறி வழங்கப்பட்டிருக்க லாம். '*தன்ம தாஹள*' (தாவள) மடம் என்பது, தாஹள நாட்டுச் சிவா சாரியார் மடம் என்று கருதுதல் தகும்.

(2) கோவிலுக்குச் சொந்தமாகப் பனையம்பாக்கம், திருப்பாலைவனம் என்னும் சிற்றூர்கள் இருந்தன. அவ்வூர் களுக்கு இருந்த வரிகளை மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் என்ற விஜய கண்ட கோபாலன் நீக்கினான்.

(3) திருப்பாலைவனக் கோவிலில் தருமகர்த்தர்கள் இருந் தனர்; கோவிலதிகாரிஸ்ரீகாரியம் **பல்லவராயன்** எனப்பட்டான். அவன், நகரத்தார், பல மண்டலங்களைச் சேர்ந்த பரதேசிகள் ஆகியோர் கூடிய கூட்டத்தில்— **மகமை வரிகள்** கோவிலுக்கு விடப்பட வேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது,

(4) இன்று திருப்பாலைவனம் என்று அழைக்கப்படும் ஊரின் பெயர் அக்காலத்தில் கோவிலின் பெயராக இருந் திருக்கலாம் என்பது தெரிகிறது. "**கோளூர்** நிலையிலுள்ள **திருப்பாற்றுறையில்** உள்ள திருப்பாலைவனமுடையார் கோவில்" என்பது கல்வெட்டு வாசகம். இதனால் **கோளூர்** என்னும் பேரூரின் ஒரு பகுதி **திருப்பாற்றுறை** என்பதும், **திருப் பாலைவனம்** என்பது கோவிலின் பெயர் என்பதும், இவ் வாசகத்தால் விளங்குகின்றன அல்லவா?

(5) அக்காலத்தில் **பழங்காசுகள், கண்ட கோபாலன் மாடை, புஜபல மாடை** என்பன வழக்கில் இருந்தன. "பொதுவாக வழங்கும் **காசு, பொன்** என்பவற்றுடன் கண்ட கோபாலன் மாடை, புஜபல மாடை போன்ற பொற்காசுகளும் 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் திருப்பாலைவனப் பகுதியில் வழங்கின. இவற்றை வழங்கிய அரசர் யார் என்பதை உறுதியாகக் கூற இயலாது. ஆனால், அவை மூன்றும் குலோத்துங்கனது 21-ஆம் ஆட்சியாண்டில் வழக்கில் இருந்தன என்று மட்டும் கூறுதல் இயலும். கண்ட கோபாலன் மாடை, விஜயகண்ட கோபாலன் ஆட்சிக் காலத்தில் வெளியிட்டவை. அவன் கி. பி. 1250-இல் ஆட்சி தொடங்கியவன் (A. R. E. 1920, Para. 57). 'ஸ்ரீபுஜவ' என்னும் பெயர் கொண்ட நாணயங் கள் நெல்லூர் மாவட்டத்துக் கோடூரில் கிடைத்துள்ளன.

இவை யாரைக் குறிப்பன என்பது திட்டமாகக் கூறக் கூடவில்லை. *

(6) நெல்லூர் மநுமசித்தீசுவரமுடைய நாயனார் கோவிலில் **சித்த மாதேவியார்** என்ற ஆடுமகள் (நடன மகள்) இருந்தாள். அவளது உடன் பிறந்தவள் **பனையாண்டை** என்ற **கண்ட கோபால மாணிக்கம்** என்பவள். அவள் பெயரால் கண்ட கோபாலன், 'கண்ட கோபால மாணிக்க மடம்' என்பதைத் திருப்பாலைவனத்தில் ஏற்படுத்தினான்.

(7) நாணயப் பரிசோதகன் சங்க காலத்தில் **வண்ணக்கன்** எனப் பெயர் பெற்றான். வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் என்பவர் சங்ககாலப் புலவர். அவ்வலுவல் பெயர் சோழராட்சியிலும் தொடர்ந்து இருந்துவந்தது என்பது இக்கோவில் கல்வெட்டுக்கள் இரண்டால் தெரிகிறது. விஜயகண்ட கோபால தேவரது 16-ஆம் ஆட்சி ஆண்டில் ஆரணி **வண்ணக்கன்** பேரம்பலக் கூத்தன் வேட்டையழகியான் என்பவன் ஒரு விளக்கெரிக்க ஆடுகள் தானம் செய்தான். திருக்காளத்தி தேவர் என்ற கண்ட கோபால தேவரது மூன்றாம் ஆட்சி ஆண்டில் ஆரணி **வண்ணக்கன்** காவுடையான் சூரிய தேவன் என்பவன் கோவில் பூசைக்கு நிலதானம் செய்தான் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இவ்விரண்டு கல்வெட்டுச் செய்திகளையும் நோக்க, வண்ணக்கன் என்ற அரசாங்க அலுவலன் பேரூர்களில் இருந்தனன் என்பது தெரிகிறது.

(8) ஜயங்கொண்ட சோழ **மண்டலத்து** மெய்க்குன்ற வள **நாட்டுப் பையூர்க் கோட்டத்துத்** திருப்பாலைவனம் கோவிலுக்குச் சோழமண்டலம், பாண்டி மண்டலம், திருமுனைப்பாடி நாடு, இவற்றைச் சேர்ந்த மக்களும் தொண்டை மண்டலத்துப் பல கோட்டங்களைச் சேர்ந்த மக்களும் திருப்பணிகள் செய்தனர். அவருட் சிலர் தங்கள் தங்கள் ஊர்களில் இருந்த நிலங்களைக் கோவிலுக்கு எழுதுவித்தனர். எனவே, இக்

---

*A. R. E. 1929, Part. II

கோவிலுக்குப் பல ஊர்களிலும் நிலங்கள் இருந்தன என்பது அறியத்தகும்.

(9) இக்கோவிலுக்குரிய நிலங்கள் கீழ்வரும் ஊர்களில் இருந்தன என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஞாயிறு, பூவரம்பி, தத்தமஞ்சி, கோளூரைச் சேர்ந்த மெதுக்கூர் என்னும் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலம், பையூர்க் கோட்டத்துப் பெரும்பேடு, பையூர்க் கோட்டத்து அளி நல்லூர்.

(10) கோவிலில் விளக்கெரிக்கப் பணம் உதவியவர்கள் விளக்குத் தண்டையும் கோவிலுக்குக் கொடுத்தனர் என்பதைச் சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

(11) மனைவியர் தங்கள் நலனுக்கும் தங்கள் கணவர் நலனுக்கும் கோவிலில் விளக்கெரித்தல் அக்கால வழக்கம். அமனிபாக்கிழான் மகளிர் தங்கள் நலனுக்கும் கணவன் நலனுக்கும் கோவிலில் விளக்கெரிக்க 8பழங்காசுகளைக் கொடுத்தனர் என்பதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

(12) நிலத்திற்கு '**ஆலால சுந்தர விளாகம்**' என்ற பெயர் இருந்தது.

(13) **ஆண்டார்** என்பவர் மலர் பறித்தல், அலகிடுதல், மெழுக்கிடுதல், திருவீதி தூய்மை செய்தல் ஆகிய கோவில் பணிகளைச் செய்பவர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. * அன்பர்க்கடியார் மடத்தில் இத்தகைய ஆண்டார்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் இப்பணிகளோடு வேறுபணிகளையும் செய்தனர் என்பது மேலே குறிக்கப்பட்டதன்றோ?

(14) திருப்பாலைவனம் சிவன் கோவிலில் **திருக்கோட்டி மண்டபம்** இருந்தது. ஆண்டார்கள் அதனை மேற்பார்க்கவும் திருமுறை ஓதவும் கடமைப்பட்டவரென்று கல்வெட்டுக் கூறுகிறது. சீகாழி, திருக்காராயில், திருவீழிமிழலை, திருவு சாத்தானம் முதலிய கோவில்களில் **திருக்கைக் கோட்டி மண்டபங்கள்** இருந்தன. அவற்றில் திருமுறைகள் பாதுகாக்கப்

---

* 350 of 1919; S. I. I. 7.97

பட்டன — அவற்றைப் பாதுகாத்தவர் ‘தமிழ் விரகர்’ எனப் பட்டார் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. * இவற்றை நோக்க, திருப்பாலைவனத்தில் இருந்த திருக் கோட்டி மண்ட பம் என்பது திருக்கைக் கோட்டி மண்டபமாக இருத்தல் கூடும் என்று கருதுதல் பொருத்தமாகும்.

## அக்கால மக்கள் பெயர்கள்

சூரிய தேவர், நங்க மகாதேவியார் (நங்கை மகாதேவி யார்), திரு ஏகம்பமுடையான், நாற்பத்தெண்ணாயிரம் நம்பி †, சித்தமாதேவியார், கண்ட கோபால மாணிக்கம், அம்மையப் பன் பார்ப்பதிபாகன், நாற்பத்தெண்ணாயிர வேளான், திரு வரங்கமுடையான், ஸ்ரீதரன், சோழ மகிபாலன், தம்முசித்தி, நல்ல சித்தி, எர்ரசித்தி, திருச்சிற்றம்பலமுடையான், பது மன், மாரட்டன், அறமுடையான், அபயம்புக்கான், கங்கமா தேவி **திலகவாழ் நுதலி, பெரியான்**, திருச்சிற்றம்பலமுடையான்,

---

* 381 of 1918; 203, 414 & 454 of 1908.

† *‘மதுரையில்* **நாற்பத்தெண்ணாயிரம்** *சிவனடியார் இருந்து சிவத்தொண்டு செய்துவந்தனர்’ என்று நம்பி திருவிளையாடல் கூறி அப்பெருமக்கட்கு வணக்கம் செலுத்துகிறது. ‘நாற்பத்தெண்ணாயி ரம்’ என்பது தில்லை* **மூவாயிரம்**, *திருப்பெருந்துறை* **முந்நூறு**, *திருவாக்கூர்-***ஆயிரம்**, *திருவீழிமிழலை-***ஐந்நூறு** *என்றாற்போல ஒரு கூட்டத்தின் பெயராகும். இக்கூட்டத்தினர் சிதம்பரம், திருவானைக்கா, திருப்பூவணம் போன்ற இடங்களில் இருந்து சிவத்தொண்டு செய்தனர் என்று தக்கயாகப்பரணி (கண்ணி* 219, *உரை) கூறுகின்றது. ஒரு நடனமகள் ‘***நாற்பத்தெண்ணாயிர மாணிக்கம்** *என்ற பெயருடன் இருந்தாள் என்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.* (202, 214 of 1929-30). *இந்த நாற்பத்தெண்ணாயிரம் தொண்டரிடம் அவளோ அவள் பெற்றோரோ கொண்டிருந்த மதிப்பு இதனால் தெரிகிறதன்றோ? இவ்வாறே இக்கோவில் கல்வெட்டில் காணப்படும் நம்பி என்பவனோ அவன் பெற்றோரோ நாற்பத்தெண்ணாயிரவரிடம் கொண்டிருந்த மதிப்பு இப்பெயரால் நன்கு தெரிகிறது.*

செழிய வேளான், பேரம்பலக் கூத்தன். வேட்டையழகியான், தியாக சமுத்திரப் பல்லவராயன், சுவேதவனப் பெருமாள், சாமிப் பிள்ளை, கோவப்பிள்ளை, **பெரியாழ்வார்** வானவன் விழுப் பரையன், **செங்கதிர்ச் செல்வன்,** நாராயணன், உதயகிரி அமைச்சன் திம்மனு, ஓபலராஜய்யா, அன்னப்பிள்ளை நாயக்கர், தேவர்கள் தேவன், வேங்கடராசு.

## பழைய ஊர்கள்

கல்வெட்டுக்களில் கண்ட ஊர்கள் சில இன்றும் திருப்பாலைவனத்தைச் சுற்றிலும் இருந்து வருகின்றன. அவற்றின் பட்டியலைக் கீழே காண்க:

| ஊரின் பெயர் | திருப்பாலைவனத்திற்கு | தொலைவு |
|---|---|---|
| 1. மெதூர் | மேற்கு | 1½ மைல் |
| 2. பெரும்பேடு | தெற்கு | 4 மைல் |

இவ்வூரில் அக்காலத்தில் **ஆட்சி மன்றம்** இருந்தது.

| | | |
|---|---|---|
| 3. பூவாமி | வட மேற்கு | 1 மைல் |

இவ்வூரில் அக்காலத்தில் **ஆட்சி மன்றம்** இருந்தது. இதன் பழைய பெயர் **பூவரம்பி.**

| | | |
|---|---|---|
| 4. கோளூர் | வடமேற்கு | 2½ மைல் |

திருப்பாலைவனம் இவ்வூரைச் சேர்ந்ததாக இருந்தது.

| | | |
|---|---|---|
| 5. தத்தமஞ்சி | தென் கிழக்கு | 3 மைல் |

பழைய காலத்தில் **ஆட்சி மன்றம்** இருந்தது.

| | | |
|---|---|---|
| 6. பிரளயம்பாக்கம் | கிழக்கு | 1 மைல் |

இதுகல்வெட்டில் **பனையம்பாக்கம்** எனப்பட்டது போலும்! இவ்வூர் திருப்பாலைவனக் கோவிலுக்குச் சொந்தமானது.

| | | |
|---|---|---|
| 7. அயநல்லூர் | தென் மேற்கு | 5 மைல் |

இதன் பழைய பெயர் **அளிநல்லூர்.**

| | | |
|---|---|---|
| 8. ஈஞ்சூர் | வடக்கு | 6 மைல் |

---

*இது முதல் 3 பெயர்கள் 18-ஆம் நூற்றூண்டைச் சேர்ந்தவை.*

9. பெருங்கரும்பூர் வட மேற்கு 4 மைல்
இதன் பழைய பெயர் பெருங்குறும்பூர்.

10. நெக்குன்றம் தென்மேற்கு 15மைல்
இதன் பழைய பெயர் **மெய்க் குன்றம்** ("மெய்க்குன்ற வள நாட்டுப் பையூர்க்கோட்டம்" என்பது கல்வெட்டு.)

11. சிறுவாக்கம் தெற்கு 7 மைல்
இது பண்டு '**சிறுவரை**' எனப்பட்டது.

12. பேரூர், ஆவூர், ஆமூர், எயினூர்,புதுவாயில் என்பவை பையூர்க்கோட்டத்தைச் சேர்ந்தவை.

## இன்றைய திருப்பாலைவனம் கோவில்

இவ்வூர்ச் சிவன் கோவில் கிழக்கு நோக்கியுள்ளது; ஐந்து நிலைகள் உள்ள கோபுரத்தை உடையது. கோவிலின் முன் பதினாறுகால் மண்டபம் கோயிலின் வாயிலை அழகு செய்கிறது. கோயிலின் எதிரில் ஒரு திருக்குளம் இருக்கிறது. அதன் பெயர் **அமிர்த புஷ்கரணி** என்பது. அக்குளத்தில் செந்தாமரை பூத்து அழகு செய்கிறது. அதற்குக் கிழக்கே திருநந்தவனம் இருக்கிறது.

கோவில் நீள் சதுரப் பரப்பையுடையது. கோவில் மதில் கிழக்கு மேற்கில் 506 அடி நீளமுடையது; தெற்கு வடக்கில் 550 அடி நீளமுடையது. கோவிலுள் சுவாமிக்கும் அம்மனுக்கும் தனித்தனிக் கோவில்கள் உள்ளன; தனித்தனித் திருச்சுற்றுக்களும் உள்ளன. இவ்விரண்டு கோவில்களையும் உள்ளடக்கிய வெளித்திருச்சுற்று ஒன்றும் இருக்கிறது. சுவாமியின் பெயர் **பாலீசர்** அல்தது **அமிர்தேசுவரர்** என்பது; அம்மன் பெயர் **லோகாம்பிகை** என்பது.

கோவிலின் கருவறை யானையின் பின்பக்கத்தை ஒத்திருக்கிறது. சுவாமி கோவிலைச் சுற்றியிருக்கும் உள்திருச்சுற்றில் ஆஞ்சநேயர், நவக்கிரகம், சண்டேசுவரர் முதலிய மூர்த்தங்கள் தாபிக்கப்பட்டுப் பூசையில் இருந்து வரு

கின்றன. சுவாமி கோவிலில் மகாமண்டபம் இருக்கிறது. கோவிலுள் தென்மேற்கு மூலையில் இத்தல மரமாகிய **பாலை மரம்** தழைத்து ஓங்கியுள்ளது.

இங்குள்ள **லிங்கம்** சுயம்பு; வெண்மை நிறம் உடையது. இதன் மேற்புறம் மரப்பட்டையால் மூடப்பட்டது போல் காணப்படுகிறது. இதன் உச்சியில் பிளவு காணப்படுகிறது. "இது ஒரு காலத்தில் மரத்தால் மூடப்பட்டிருந்தது. சோழ அரசனது யானை அம்மரத்தில் கட்டப்பட்டது. அந்த யானை திடீரென்று இறந்தது. அரசன் சினந்து அம்மரத்தைக் கோடரி கொண்டு வெட்டுவித்தான். அப்போது மரத்தின் அடிப்பகுதியிலிருந்து குருதி வெளிப்பட்டது. சோழன் உடனே சோதித்தான்; லிங்கத்தை மரம் மூடியிருந்ததை அறிந்தான்; லிங்கத்தின் உச்சியில் கோடரியால் பிளவு ஏற்பட்டிருந்ததைக் கண்டான்; அவ்விடத்தில் ஒரு கோவில் கட்டினன்," என்பது **தல வரலாறு**.

"பாற்கடலில் கிடைத்த அமிர்தத்தைத் தேவர்கள் இவ்விடத்தில் பங்கிட்டுக்கொண்டனர்—அமிர்தத்தின் ஒரு பகுதிகொண்டு லிங்கத்தை அமைத்துப் பூசித்தனர். அதனுல் சுவாமி அமிர்தேசுவரர் எனப்பட்டார்," என்பது **தல வரலாறு**. லிங்கத்தின்மீது சாத்தப்படும் சந்தனம் கரைகிறது. ஆதலால் வெள்ளியால் செய்யப்பட்ட திருநீற்றுப்பட்டத்தின் மீதுதான் சந்தனம் சாத்தப்படுகிறது. லிங்கத்திற்குப் பால், இளநீர், பனிநீர், தண்ணீர் முழுக்கு மட்டும் நடைபெறுகிறது.

இக்கோவிலுக்குப் பல ஊர்களில் நிலங்கள் இருக்கின்றன. பையூர்க் கோட்டத்து வேளாளர் என்ற முதலிமார்கள் இக்கோவில் நடைமுறையைக் கவனித்துவருகின்றனர். விழாக்களும் மூன்று கால பூசையும் நடைபெற்று வருகின்றன. அச்சிடப்பெருத **தல புராணம்** (15 அதிகாரங்களை உடையது) உரைநடையில் உள்ளது. இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் ஆணையின்படி 1950-இல்

**தல வரலாறு** ஒன்று சிறிய அளவில் (16 பக்கம்) அச்சிடப் பட்டுள்ளது.



## திருப் பாலீச்சுரர் பதிகம்

பாலைமரப் பொழினிறையுன் பதியடைந்த சோழன்
பகரரிய சேனையிலோ ரானைதரு பிணைத்த
காலையதின் கருவிகளிற் கனவுதிரம் பெருகிக்
கணப்போதி லுயிர்விலங்கக் கண்டவனும் பயந்தே
சோலையிலம் மரத்தடியைச் சோதனைசெய் துனது
சுயம்புருவங் கண்டுமன்னன் துய்யசெம்பொன் கோயில்
சீலமுடன் செய்துதொழும் திருப்பாலை வனவாழ்
தெள்ளமுதாம் பாலீசா! திருவருள்செய் தருளே.

— சிவராஜ சுவாமிகள்

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001

87